**முதன்மை மாவட்ட நீதிமன்றம், இராமநாதபுரம்.**

**சாட்சிகளின் வாக்குமூலம்**

**(அத்தியாயம் XXIII குற்றவியல் விசாரணை முறை சட்டம்)**

**அமர்வு வழக்கு எண். : 47/2023**

**நாள்: 14.10.2025**

**அரசு தரப்பு சாட்சி** : 10 (LW10)

2025ம் ஆண்டு அக்டோபர் திங்கள் 14ம் நாள் சாட்சியின் வாக்குமூலம் 1873ம் வருடத்திய சட்டம் பிரிவு 10ன்படி சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | செந்தில்வேல் | ஜாதி | |
| தந்தை பெயர் | | தொழில் | |
| கிராமம் | | சமயம் | |
| தாலுகா | | வயது | |

( 2 மற்றும் 4 எதிரிகள் ஆஜர், 3ம் எதிரி ஆஜர் இல்லை. குவிமுச பிரிவு 317ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு ஏற்கப்பட்டது. 1ம் எதிரி இறந்துவிட்டார்)

<u>முதன்மை விசாரணை:</u>

நான் தற்போது பரமக்குடி தாலுகா காவல் நிலையத்தில் தலைமைக்காவலராக பணிபுரிந்து வருகிறேன். வழக்கு சம்பவ காலத்தில் பரமக்குடி நகர் காவல் நிலையத்தில் முதல்நிலை காவலராக பணிபுரிந்து வந்தேன். சாட்சிகள் காவலர்கள் முத்தழகு, தெய்வேந்திரன், நீதி, சிறப்பு சார்பு ஆய்வாளர் பழனி ஆகியோரை எனக்குத் தெரியும். ஆஜர் இரு எதிரிகளையும், ஆஜர் இல்லாத எதிரி கிருஷ்ணவேல் ஆகியோரை எனக்குத் தெரியும்.

கடந்த 02.10.2012ம் தேதி இரவு ரோந்து அலுவல் பணியாக எனக்கு நியமனம் செய்யப்பட்டு, பரமக்குடி ஓட்டப்பாலம் கலைநிகழ்ச்சிகளை



MEHBUB ALI KHAN A K
Digitally signed by MEHBUB ALI KHAN A K
Date: 2025.10.14 16:33:33 +0530

முடித்துவிட்டு, 03.10.2012 ம் தேதி அதிகாலை சுமார் 03.30 மணியளவில் நான் முதல் நிலை காவலர் முத்தழகு என்பவரும் தனித்தனியே இருசக்கர வாகனங்களில் பரமக்குடி நவீன் பேக்கரிக்கு டீ குடிக்க சென்றோம். அங்கு இரவு ரோந்து அதிகாரி SSI திரு.பழனி நின்று கொண்டிருந்தார். அப்போது அவர் க்ரைம் பார்ட்டியை யாரோ அசால்ட் செய்துவிட்டதாக சொன்னதால் அவருடன் நானும் முத்தழகுவும் சுமார் 03.45 மணியளவில் பரமக்குடி காந்தி சிலை அருகில் சென்றோம். அங்கு க்ரைம் SI முனியசாமி, காவலர் ஞானசேகரன் (A2), Highway Patrol வண்டியில் க்ரைம் Accused வெங்கடேசனை ஏற்றி வைத்திருந்தனர்.

அங்கு சிறிது நேரத்தில் க்ரைம் காவலர் நீதி, தெய்வேந்திரன் அங்கு வந்தனர். அவர்கள் வந்த சிறிது நேரத்தில் க்ரைம் டெம்போ டிராவலர் வண்டியை முதல் நிலை காவலர் அசோக்குமார் என்பவர் ஓட்டிவந்தார். க்ரைம் SI முனியசாமி வெங்கடேசன் என்பவரை டெம்போ டிராவலரில் ஏற்றச்சொன்னார். அப்போது நானும், நீதி, தெய்வேந்திரன், ஞானசேகரன் ஆகியோர் சேர்ந்து ஏற்றினோம். அப்போது அதிகாலை சுமார் 04.00 மணி இருக்கும். அப்போது வெங்கடேசன் நல்ல நிலையில் இருந்தார். பிறகு டெம்போ டிராவலர் வாகனத்தில் இருந்து ஞானசேகரன் இறங்கிக்கொண்டு, மேற்படி வாகனத்தை பரமக்குடி நகர் காவல் நிலையத்திற்கு கொண்டு செல்லும்படி சொன்னார். நான், நீதி, தெய்வேந்திரன் ஆகிய மூவரும் மேற்படி வாகனத்தில் சென்றோம். அப்போது டெம்போ டிராவலரில் நாங்கள் சென்ற போது, மேற்படி வெங்கடேசன் நல்ல உடல் நிலையுடன் அமர்ந்து வந்தார். மேற்படி வாகனத்திற்கு பின்னால் SI முனியசாமி, ஞானசேகரனும் நகர் காவல் நிலையம் வந்தனர்.

வாகனம் பரமக்குடி நகர் காவல் நிலையம் வரும் பொழுது சுமார் அதிகாலை 04.05 மணி இருக்கும். அப்போது க்ரைம் SI முனியசாமி நகர் காவல் நிலையத்திற்கு உள்ளே சென்றுவிட்டு திரும்பி வந்து, இங்கே தண்ணீர் வசதி இல்லை, வண்டியை எமனேஸ்வரம் காவல் நிலையத்திற்கு போக சொன்னார்.



MEHBUB ALI KHAN A K
Digitally signed by MEHBUB ALI KHAN A K
Date: 2025.10.14 16:33:36 +0530

நான் அப்போது வண்டியில் இருந்து இறங்கி கொண்டேன். பிறகு காவலர் முத்தழகை தொலைபேசியில் சுமார் அதிகாலை 04.15 மணியளவில் தொடர்பு கொண்ட போது, பரமக்குடி ரயில் நிலையம் அருகில் வரச்சொன்னார். நான் அங்கு சென்று தொடர்ந்து அலுவல் செய்து, சுமார் காலை 06.30 மணியளவில் அலுவல் முடித்து சென்றுவிட்டேன்.

பின்னர் 04.10.2012 ம்தேதி இராமநாதபுரம் அரசு மருத்துவமனையில் (சாட்சி தற்போது 03.10.2012 ம் தேதி என்று கூறுகிறார்,) சிகிச்சையில் இருந்த வேறொரு வழக்கு சம்மந்தமான நபரிடம் வாக்குமூலம் பெற்று, சுமார் பிற்பகல் 02.30 மணியளவில் பரமக்குடி நகர் காவல் நிலையத்திற்கு வரும் பொழுது கூட்டமாக இருந்தன. என்ன என்று கேட்டபோது, எமனேஸ்வரம் காவல் நிலையத்தில் க்ரைம் பார்ட்டி வைத்திருந்த வெங்கடேசன் என்பவர் உடல்நிலை சரியில்லாமல் மருத்துவமனையில் சேர்த்து சிகிச்சையில் இருந்தவர் இறந்துவிட்டதாக கூறினார்கள். வெங்கடேசன் எப்படி இறந்தார் என்று நான் கேட்டுத் தெரிந்து கொள்ளவில்லை, என்னிடமும் யாரும் சொல்லவில்லை.

பின்னர் 04.10.2012 ம் தேதி இறந்த வெங்கடேசன் Postmortem அலுவல் நியமிக்கப்பட்டு, பரமக்குடி அரசு மருத்துவமனை சென்று, பிரேதத்தை அடையாளம் காண்பித்து, பரமக்குடி JM அவர்கள் பிரேத விசாரணை செய்ய உதவியாகவும், மருத்துவக்குழுவிற்கு உதவியாகவும் இருந்தேன். இவ்வழக்கு CBCID போலிஸ்க்கு மாற்றப்பட்டது. CBCID காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார். என்னை பரமக்குடி நீதித்துறை நடுவரும் பிரேத விசாரணையின் போது விசாரித்தார்.

**<u>2 முதல் 4 எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

நான் காவல் நிலையத்தை விட்டு வெளியே பணிக்கு செல்லும் போது, பாக்கெட் டைரி பராமரிப்பேன் என்றால் சரிதான். எனக்கு ஒதுக்கப்படும்



MEHBUB ALI KHAN A K
Digitally signed by MEHBUB ALI KHAN A K
Date: 2025.10.14 16:33:40 +0530

பணி மற்றும் எங்கு  போக வேண்டும் ஆகிய குறிப்புகள் பொதுநாட்குறிப்பில் பதிவு செய்யப்படும் என்றால் சரிதான்.

வெங்கடேசன் என்பவரை க்ரைம் பார்ட்டி துறத்திச்சென்று அவர் இருசக்கர வாகனத்தில் இருந்து கீழே விழுந்து காயம்பட்ட விவரம் எனக்குத் தெரியும் என்றால் சரியல்ல, எனக்குத் தெரியாது. க்ரைம் SI முனியசாமியை வெங்கடேசன் கத்தியால் குத்த வந்த போது, அவரை முனியசாமி லத்தியால் அடித்து, கத்தியை பிடுங்கி பிடித்ததாக நான் கேள்விப்பட்டேன் என்றால் இல்லை. காந்தி சிலை முன்பு உள்ள ரோட்டில் வெங்கடேசனை தெற்குப்பக்கம் பார்த்தேனா அல்லது வடக்குப்பக்கம் பார்த்தேனா என்றால் தெற்கு பக்கம் பார்த்தேன்.

பரமக்குடி நகர் காவல் நிலையத்திற்கு சென்ற போது என்ன நேரம் இருக்கும் என்றால் அதிகாலை 04.05 மணி இருக்கும். அன்று பரமக்குடி நகர் காவல் நிலையத்தில் நிலைய பொறுப்பு அதிகாரியாக யார் இருந்தார் என்றால் ஞாபகம் இல்லை. 03.10.2012 ம் தேதியன்று இராமநாதபுரம் அரசு மருத்துவமனைக்கு வேறொரு வழக்கு சம்மந்தமாக சென்றேன் என சொல்லியுள்ள நிலையில் அதன் குற்ற எண் சொல்ல முடியுமா என்றால் ஞாபகம் இல்லை.

வெங்கடேசன் உடைகள் அணிந்திருந்ததால், அவர் உடம்பில் காயங்கள் இருந்தனவா என்று நான் பார்க்கவில்லை என்றால் சரிதான். என்னை CBCID ஆய்வாளர் 12.02.2018 ம் தேதி விசாரித்தார். வழக்கு சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் தேதி 03.10.2012 என்றால் சரிதான். என்னை 26.10.2012 ம் தேதி பரமக்குடி நீதித்துறை நடுவர் என்னை விசாரித்தார் என்றும், நான் வாக்குமூலம் கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். என்னை பரமக்குடி நீதித்துறை நடுவர் விசாரித்த போது, நான் Postmortem த்திற்கு பிரேதத்தை கொண்டு சென்ற விவரத்தை மட்டுமே சொல்லியுள்ளேன் என்றால் சரிதான்.



MEHBUB ALI KHAN A K
Digitally signed by MEHBUB ALI KHAN A K
Date: 2025.10.14 16:33:43 +0530

வழக்கு சம்மந்தமாக என்னை பரமக்குடி காவல் துணை கண்காணிப்பாளர் விசாரித்தாரா என்றால் இல்லை. நான் எனது முதன்மை விசாரணையில் சொன்னது போன்று, வெங்கடேசனை சொன்ன விதத்தில் சொன்ன இடத்தில் பார்க்கவில்லை என்றாலும், அவருடன் பரமக்குடி நகர் காவல் நிலையத்திற்கு டெம்போவில் செல்லவில்லை என்றாலும் சரியல்ல. எனது முதன்மை விசாரணையில் சொன்ன விவரங்கள் அனைத்தும், என் உயர் அதிகாரிகள் சொல்லிக்கொடுத்தன் பேரில் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல.

மறு விசாரணை – இல்லை.

**நீதிமன்ற கேள்வி** : வெங்கடேசன் அணிந்திருந்த உடைகளின் மீது இரத்தக்கரைகளோ, கீழே விழுந்ததால் மண் ஏதும் ஒட்டி இருந்ததா?

**பதில் :** இல்லை.

MEHBUB ALI KHAN A K

Digitally signed by MEHBUB ALI KHAN A K
Date: 2025.10.14 16:33:47 +0530

முதன்மை அமர்வு நீதிபதி ,
இராமநாதபுரம் .